**கவனிக்க.-** *2010.01.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1636 - 2010 ජනවාරි 08 වැනි සිකුරාදා - 2010.01.08

*1636 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 118 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் யூரிமார் பட்டியலொன்று மும்மொழிகளிலும் தனித்தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளன.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2010, சனவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, சனவரி மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை

*சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) நியதிச்சட்டம்*

*03.12.2009 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*
*15.12.2009 ஆந் திகதி அனுமதி கிடைத்தது.*

*சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் ஆணைப்படி,*

*லலித் தொடம்கொட்டுவ,*
*சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை செயலாளர்.*

*சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை செயலகம்,*
*சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை.*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை

*2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச்சட்டத்தைத் திருத்துவதற்கானவொரு நியதிச்சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது:-*

*1. இந்நியதிச்சட்டம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) நியதிச்சட்டமென அறிமுகப்படுத்தப்படுவதுடன் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற திகதி தொடக்கம் செயற்படும்.*

*2. 2009 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச்சட்டத்தின் 2 ஆம் பந்தியில் "2009 நிதியாண்டு எனக்குறிப்பிடப்படுகின்ற 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியில் ஆரம்பமாகி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் காலஎல்லையின் சேவைச் செலவினங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பதின்மூன்றாயிரத்து நாநூற்று எழுபத்தெட்டு மில்லியன் இருநூற்று தொண்ணூற்று ஓராயிரத்து நாநூற்று இருபத்திநான்கு ரூபா இருபத்தாறு சதமான (13,478,291,424.26) சபரகமுவ மாகாண சபையின் செலவினம்" என்பது "2009 நிதியாண்டு எனக்குறிப்பிடப்படுகின்ற 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியில் ஆரம்பமாகி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் காலஎல்லையின் சேவைச் செலவினங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பதின்மூன்றாயிரத்து ஐநூற்றியிரண்டு மில்லியன் எண்பத்து நான்காயிரத்து அறுநூற்று அறுபத்தேழு ரூபா பதினாறு சதமான (13,502,084,667.16) சபரகமுவ மாகாண சபையின் செலவு" எனவும் அதன் 01 ஆம் அட்டவணை பின்வருமாறு திருத்தப்படுகின்றது.*

### முதலாம் அட்டவணை

*மாகாண சபையின் பொதுச் சேவைகளுக்கான செலுத்தவேண்டிய பணத்தொகைகள்*

| | |
|---|---|
| *தலைப்பு 800 தொடக்கம் 861 வரை* | *ரூபா* |
| *மீண்டுவரும் செலவினங்கள்* | *10,692,805,000.00* |
| *மூலதனச் செலவினங்கள்* | *2,809,279,667.16* |
| *மொத்தம்* | *13,502,084,667.16* |

| | மீண்டுவரும் செலவினங்கள் ரூபா ச. | மூலதனச் செலவினங்கள் ரூபா ச. |
|---|---|---|
| தலைப்பு 800 - கௌரவ ஆளுநர் அவர்கள் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 31,557,000.00 | - |
| தலைப்பு 801- மாகாண சபை செலயகம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 81,147,000.00 | - |
| தலைப்பு 802 - மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 10,019,000.00 | - |
| தலைப்பு 803 - கூட்டுறவு ஆணைக்குழு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 2,800,000.00 | - |
| தலைப்பு 804 - பிரதான செயலாளர் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 125,526,000.00 | 474,720,667.16 |
| தலைப்பு 805 - பிரதி பிரதான செயலாளர் (நிருவாகம்) | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 16,018,000.00 | - |
| தலைப்பு 806 - பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமை) | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 18,137,000.00 | - |
| தலைப்பு 807 - பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 14,027,000.00 | - |
| தலைப்பு 808 - பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | | |
| நிகழ்ச்சித்திட்டம் 50 - நிர்மாணிப்பு மற்றும் பெருந்தெருக்களைப் பேணுதல் | 104,351,000.00 | - |
| தலைப்பு 809 - மாகாண வருமானத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 34,098,000.00 | - |
| தலைப்பு 810 - நீதி, சமாதானம், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவல் தொழில்நுட்பம், செய்திகள், கலாசார விளையாட்டுத்துறை, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 56,770,000.00 | 13,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 47- பயணிகள் போக்குவரத்து | - | 30,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 49 - மின்சக்தி மற்றும் எரிசக்திச் சேவைகள் | - | 40,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 52 - பிரதேச அபிவிருத்தி | - | 10,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 53 - கூட்டுறவு அபிவிருத்தி | - | - |
| நிகழ்ச்சித்திட்டம் 60 - சமூக அபிவிருத்தி | - | 85,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 61 - வீட்டு மற்றும் சமூக வசதிகள் | 1,533,000.00 | 25,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 63 - தோட்ட அடிப்படை வசதிகள் | - | 15,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 80 - ஆரம்பக் கல்வி | | 193,559,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 81 - இரண்டாந்தரக் கல்வி | - | 231,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 83 - தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | - | - |
| நிகழ்ச்சித்திட்டம் 87 - கல்வியில் ஈடுபடுதலை மேம்படுத்தல் | - | - |
| நிகழ்ச்சித்திட்டம் 90 - உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை | - | 31,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 93 - சமய மற்றும் கலாசார விவகாரங்கள் | 1,450,000.00 | 15,000,000.00 |
| தலைப்பு 811 - கல்வித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 202,314,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 80 - ஆரம்பக் கல்வி | 1,896,278,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 81 - இரண்டாந்தரக் கல்வி | 3,855,910,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 87 - கல்வியில் ஈடுபடுதலை மேம்படுத்தல் | 4,570,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 88 - கல்வித்திட்டமிடல், நிருவாக மற்றும் சேவைகளை வழங்குதல் | 6,375,000.00 | - |

| | மீண்டுவரும் செலவினங்கள் ரூபா ச. | மூலதனச் செலவினங்கள் ரூபா ச. |
|---|---|---|
| தலைப்பு 812 - உள்ளூராட்சித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 4,990,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 60- சமூக அபிவிருத்தி | 1,089,225,000.00 | - |
| தலைப்பு 813 - கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 53 - கூட்டுறவு அபிவிருத்தி | 39,713,000.00 | - |
| தலைப்பு 814 - விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 90 - உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை | 8,441,000.00 | - |
| தலைப்பு 820 - மாகாண தெருக்கள் அபிவிருத்தி கிராமிய அடிப்படை வசதிகள் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 24,623,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 50 - நிர்மாணத்துறை மற்றும் பெருந்தெருக்களைப் பேணுதல் | 105,000,000.00 | 985,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 52 - பிரதேச அபிவிருத்தி | - | 25,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 90 - உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை | - | 32,000,000.00 |
| தலைப்பு 830 - சமூக நலன்புரி, நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 19,693,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 51- கைத்தொழில் அபிவிருத்தி | - | 30,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 60- சமூக அபிவிருத்தி விவகாரங்கள் | 16,955,000.00 | 15,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 61- வீடமைப்பு, சமூக வசதிகள் | - | - |
| நிகழ்ச்சித்திட்டம் 90- உல்லாச, விளையாட்டுத்துறை | - | - |
| நிகழ்ச்சித்திட்டம் 95- சமூகப் பாதுகாப்பு | - | 45,000,000.00 |
| தலைப்பு 831- கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 51 - கைத்தொழில் அபிவிருத்தி | 60,852,000.00 | - |
| தலைப்பு 832 - சமூக சேவைகள் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 95-சமூகப் பாதுகாப்பு | 83,329,000.00 | - |
| தலைப்பு 833 - நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 95- சமூகப் பாதுகாப்பு | 35,907,000.00 | - |
| தலைப்பு 840 - சுகாதார, உள்நாட்டு வைத்திய மற்றும் மகளிர் விவகார அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3- மாகாண சபை நிருவாகம் | 24,648,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 71- வைத்தியசாலைச் சேவைகள் | - | 208,420,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 72- பொது சுகாதார சேவைகள் | - | 113,580,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 73-உள்நாட்டு வைத்திய சேவைகள் | - | 45,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 96- மகளிர் விவகாரங்கள் | - | 10,000,000.00 |
| தலைப்பு 841- சுகாதாரத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3- மாகாண சபை நிருவாகம் | 120,500,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 71- வைத்தியசாலைச் சேவைகள் | 1,723,213,000.00 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 72- பொது சுகாதார சேவைகள் | 523,740,000.00 | - |
| தலைப்பு 842- ஆயுர்வேதத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 73- உள்நாட்டு வைத்திய சேவைகள் | 139,972,000.00 | - |
| தலைப்பு 850- காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதார, சுற்றாடல் விவகார மற்றும் மீன்பிடித்துறை அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3- மாகாண சபை நிருவாகம் | 23,501,000.00 | 6,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 40- காணி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி | - | 8,000,000.00 |

| | மீண்டுவரும் செலவினங்கள் ரூபா ச. | மூலதனச் செலவினங்கள் ரூபா ச. |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டம் 43- நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமை | - | 30,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 44-விவசாய அபிவிருத்தி | - | 50,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 45- கால்நடை வளங்கள் அபிவிருத்தி | - | 40,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 55 - உணவுப் பாதுகாப்பைப் பேணுதல் | - | 3,000,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் 57 - சுற்றாடல் பாதுகாப்பு | | |
| தலைப்பு 851-காணி ஆணையாளர் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 40- காணி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி | 9,069,000.00 | - |
| தலைப்பு 852-விவசாயத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 44- விவசாய அபிவிருத்தி | 80,372,000.00 | - |
| தலைப்பு 853- விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 45 - கால்நடை வளங்கள் அபிவிருத்தி | 85,984,000.00 | - |
| தலைப்பு 861- மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 10,198,000.00 | - |
| மொத்தம் | 10,692,805,000.00 | 2,809,279,667.16 |

## முற்பண அட்டவணை

1. எல்லைத் திருத்தம்

| விடய இல. | | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | திருத்தப்பட்ட எல்லை |
|---|---|---|---|
| 8301 | சமூக நலன்புரி நன்னடத்தைகள் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில் அமைச்சு | 2,600,000.00 | 1,800,000.00 |
| 8321 | சமூக சேவைகள் திணைக்களம் பற்று மீதியின் உச்ச எல்லை | 300,000.00 | 285,000.00 |
| 8421 | ஆயுர்வேதத் திணைக்களம் | 5,100,000.00 | |

1-315

---

## சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை

சபரகமுவ மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) நியதிச்சட்டம்

03.12.2009 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.
15.12.2009 ஆந் திகதி அனுமதி கிடைத்தது.

சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் ஆணைப்படி,

லலித் தொடம்கொட்டுவ,
சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை செயலாளர்.

சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை செயலகம்,
சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை.

## சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் - 2009

2010 நிதியாண்டின் சேவைச் செலவினங்களுக்காக ஏற்பாடு செய்தல், அத்தகைய சேவைச் செலவினங்களுக்காக சபரகமுவ மாகாணத்திற்குள் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரமளித்தல், அந்த நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல். அந்த விவகாரங்கள் தொடர்பிலான செலவினங்களுக்காக அந்த நிதியாண்டிற்குள் தேவைப்படும் பணங்களை சபரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது ஏனைய யாதாயினுமொரு நிதியத்திலிருந்து பணத்தொகைகளாக அல்லது முற்பணத்தொகைகளாக செலுத்துவதற்கு இடமளித்தல், சபரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு அப்பணங்களை மீளச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் மேற்கூறிய கருமங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்குமான ஒரு நியதிச்சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது:-

சுருக்கப்பெயரும் செயற்படும் திகதியும்.

1. இந்நியதிச்சட்டம் சப்பிரகமுவ மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச்சட்டமென அறிமுகப்படுத்தப்படுவதுடன் சபரகமுவ மாகாணத்தின் ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற திகதி தொடக்கம் அது செயற்படும்.

2010 நிதியாண்டிற்கான ஒதுக்கீடுகள்.

2. (1) ஏதாவதொரு பணத்தொகையை செலவிடுவதற்கு அதிகாரமளிக்கின்ற வேறு ஏதேனுமொரு சட்டத்திற்குப் பங்கம் ஏற்படாதவாறு இந்நியதிச்சட்டத்தில் "2010 நிதியாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி ஆரம்பமாகி 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் கால எல்லையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆயிரத்துமுந்நூற்றி எண்பத்திரண்டு கோடியே எண்பத்தேழு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரம் ரூபாவான (13,828,769,000) ரூபாவான சபரகமுவ மாகாண சபையின் செலவினமானது :-

(அ) சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது ஏனைய யாதாயினுமொரு நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து செலுத்தவதற்காக இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கொடுப்பனவுகளாலும்,

(ஆ) சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களாகப் பெற்றுக்கொள்ளும் பணத்தொகைகளிலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபைக்காகப் பெற்றுக்கொள்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற, கடன்களாகப் பெற்றுக்கொள்ளும் பணத்தொகைகளால் தீர்க்கப்படுதல் வேண்டும். இங்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆயிரத்து முந்நூற்றி எண்பத்திரண்டு கோடியே எண்பத்தேழு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரம் ரூபாவான (1,38,28,769,000) பணத்தொகை இந்நியதிச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் அட்டவணையின் ஏற்பாடுகள் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபைக்காகவும் அதன்பேரில் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற வேறு ஏதேனுமொரு எழுத்துமூலமான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமேற்படாதவாறு செய்யப்படுதல் வேண்டும்.

2010 நிதியாண்டிற்காக சபரகமுவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி வழங்குதல்.

3. (1) 2010 நிதியாண்டிற்குள் இந்நியதிச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரத்திலிருந்தும் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை பெறும் VI ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைகள் அவ்விவகாரத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்படவேண்டுமென்பதுடன் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட பெறுகைகளின் கூட்டுமொத்தத் தொகையானது அந்த அட்டவணையின் VI ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைக்குக் குறைவடையாதிருத்தல் வேண்டும். அவ்வாறு பெறும் தூய மேன்மிகை ஏதுமிருப்பின் அது 2010 ஆம் நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்கள் செல்வதற்குமுன் சபரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) 1 ஆம் உட்பிரிவின்கீழ் தூய மேன்மிகையைத் தீர்மானிப்பதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அதாவது,

(அ) ஏதாவதொரு விவகாரத்தின் வருமானத்திற்கு வரவேண்டியதாக முறைப்படி செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவுள்ளதான அவ்விவகாரத்தின் தொழிற்பாட்டுத் தாபன மற்றும் ஏனைய செலவினங்கள், அத்துடன்

(ஆ) ஏதாவதொரு விவகாரத்தின் அசைவற்ற மற்றும் அசைவுள்ள ஆதனங்கள் தொடர்பிலான தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாட்டு நிதியை அந்த ஒவ்வொரு விவகாரத்தினதும் வருமானத்திலிருந்தும் குறைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

4. இந்நியதிச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரம் தொடர்பிலும் 2010 ஆம் நிதியாண்டிற்குள் சபரகமுவ மாகாண சபையினால் செய்யப்படும் செலவினங்கள், அந்த நிதியாண்டிற்குள் அத்தகைய விவகாரங்கள் மூலம் சபரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படல்

வேண்டும். அவ்வாறாயினும் அத்தகைய செலவினங்கள் அந்த அட்டவணையின் V ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5. இந்நியதிச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு விவகாரம் தொடர்பில் 2010 ஆம் நிதியாண்டின் இறுதியில் நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் VII ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் அந்த நிதியாண்டின் இறுதியில் அந்த விவகாரத்தின் மொத்தப் பொறுப்புக்கள் அந்த அட்டவணையின் VIII ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

*2010 நிதியாண்டிற்குள் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் தொடர்பிலான செலவினங்களுக்காக சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் தகுந்ததொன்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்களைச் செலுத்தல்.*

6. 2010 நிதியாண்டிற்குள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இந்நியதிச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு விவகாரத்தின்மூலம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை பெறும் பெறுகைகள், அவ்விவகாரம் தொடர்பில் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் செய்யப்பட்ட செலவினங்களை நிவர்த்தி செய்வதற்குப் போதாமையாக இருப்பின் அச்செலவினங்களை நிவர்த்தி செய்வதற்காகவென அமைச்சர் கருதும் பணத்தொகைகளை சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் தகுந்ததொன்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது முற்பணங்களாகச் செலுத்தப்படவேண்டுமென அவரால் காலத்துக்குக் காலம் கட்டளைமூலம் பணிப்பிடப்படலாம். ஆயினும் அவ்வாறு கொடுக்கப்படும் முற்பணங்களின் கூட்டுமொத்தத் தொகையானது அந்த அட்டவணையின் V ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய செலவின எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்தகைய விவகாரத்தின்பேரில் முற்பணங்களாக அவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்தொகைகள் எதுவும் அமைச்சரால் கட்டளைமூலம் பணிப்பிடப்படும்வகையில் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் நிதியத்திற்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும்.

*நிகழ்ச்சித்திட்டம் மீண்டுவரும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டபோதிலும் செலவிடப்படாத பணத்தொகைகள் அந்த நிகழ்ச்சித்திட்டத்திலேயான ஏனையவொரு ஒதுக்கத்திற்கு அல்லது அந்த செலவினத் தலைப்பின் கீழேயான ஏனையவொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றும் அதிகாரம்.*

7. இந்நியதிச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின்கீழ் காட்டப்படும் ஏதாவதொரு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழான மீண்டுவரும் செலவினங்களுக்கு அந்த அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ளதும், ஆனால் செலவு செய்யப்படாததுமான அல்லது எதிர்காலத்திலும் செலவாகாதென எதிர்பார்க்கக்கூடியதுமான ஏதாவதொரு பணத்தொகை அந்நிகழ்ச்சித் திட்டத்திலேயான மூலதனச் செலவினங்களாக அல்லது ஏனையவொரு நிகழ்ச்சித் திட்டத்தின் மீண்டுவரும் அல்லது மூலதனச் செலவினங்களாக ஒதுக்குவதற்குப் பிரதான செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரின் கட்டளைப்படி மாற்றப்படலாம்.

(2) இந்நியதிச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின்கீழ் காட்டப்படும் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை அந்த தலைப்பின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அல்லது கருத்திட்டத்துக்கு வெளியே பிரதான செயலாளருக்கு மாத்திரம் செய்யப்படலாம்.

8. (1) அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்வதற்காக வரிகளிலிருந்தும் ஏனைய மூலகங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், எதிர்ப்பார்க்கப்பட்ட பணத்தொகைகளைவிடக் குறைவடையலாம் என்பதற்கு ; அல்லது

(2) ஏதாவதொரு விவாகரத்திற்காக அல்லது விவாகரங்களுக்காக முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்பட மாட்டாதென அமைச்சர் திருப்தியடையும் சந்தர்ப்பத்தில் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபயின் நிதியத்திலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் தகுந்ததொன்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது பணத்தொகைகளிலிருந்து தம்மால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின்கீழ் செலவிடுவதற்காக முன்னர் விடுவிக்கப்பட்ட பணத்தொகைகள் முழுமையாக அமைச்சரால் சபரகமுவ மாகாண சபையின் அங்கீகாரத்துடன் நீக்கிக் கொள்ளப்படலாம்.

*இந்நியதிச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய மற்றும் ஆகக்குறைந்த எல்லைகளை மாற்றுவதற்கு அமைச்சருக்குள்ள அதிகாரம்.*

9. அமைச்சரால் சபரகமுவ மாகாண சபையின் அங்கீகாரத்துடன் :-

(அ) இந்நியதிச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் V ஆம் VII ஆம் VIII ஆம் நிரல்களில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இந்நியதிச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் VI ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளையும் கட்டளைகள்மூலம் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வேறுபடுத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டாலன்றி செல்லுபடியாகாதிருத்தல் வேண்டும்.

அத்தகைய கட்டளை எதுவும் எத்தினத்தில் இடப்படுகின்றதோ அத்தினத்திற்கு முன்னரானவொரு திகதியிலிருந்து அது செல்லுபடியாதல் வேண்டுமென அதில் குறித்துரைக்கப்பட்டிருந்தால் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட திகதி தொடக்கம் அது செயற்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

10. சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் தீர்மானம் அங்கீகரிக்கப்படுதல் மூலம் இந்நியதிச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் உகந்த நிரைகளுக்கு ஏதாவதொரு விவகாரத்தைச் சேர்ப்பதன் மூலமும்,

(அ) அவ்விவகாரம் தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகள் அல்லது அவற்றின் எதனையும்,

(ஆ) அவ்விவகாரம் தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையைச் சேர்ப்பதன் மூலம்

அந்த அட்டவணை திருத்தப்படலாம்.

**முதலாம் அட்டவணை**

மாகாண சபையின் பொதுச் சேவைகளுக்கான செலுத்தவேண்டிய பணத்தொகைகள்

| | ரூபா |
|---|---|
| தலைப்பு 800 தொடக்கம் 861 வரை | |
| மீண்டுவரும் செலவினங்கள் | 11,568,596,000 |
| மூலதனச் செலவினங்கள் | 2,260,173,000 |
| மொத்தம் | 13,828,769,000 |

| | மீண்டுவரும் செலவினங்கள் ரூபா | மூலதனச் செலவினங்கள் ரூபா |
|---|---|---|
| தலைப்பு 800 - கௌரவ ஆளுநர் அவர்கள் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 33,358,000 | 1,000,000 |
| தலைப்பு 801-மாகாண சபை செயலகம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 86,983,000 | 1,000,000 |
| தலைப்பு 802 - மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 10,154,000 | 500,000 |
| தலைப்பு 803 - கூட்டுறவு ஆணைக்குழு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 3,927,000 | - |
| தலைப்பு 804 - பிரதான செயலாளர் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 134,143,000 | 456,120,000 |
| தலைப்பு 805 - பிரதி பிரதான செயலாளர் (நிருவாகம் மற்றும் பயிற்சி) | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 22,540,000 | - |
| தலைப்பு 806 - பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமை) | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 19,436,000 | - |
| தலைப்பு 807 - பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | 13,055,000 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | | |
| தலைப்பு 808 - பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | | |
| நிகழ்ச்சித்திட்டம் 50 - நிர்மாணிப்பு மற்றும் பெருந்தெருக்களைப் பேணுதல் | 103,295,000 | - |
| தலைப்பு 809 - மாகாண வருமானத் திணைக்களம் | | |
| நிகழ்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 35,706,000 | - |

| | மீண்டுவரும் செலவினங்கள் ரூபா | மூலதனச் செலவினங்கள் ரூபா |
|---|---|---|
| தலைப்பு 810 - நீதி, சமாதானம், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவல் தொழில்நுட்பம், செய்திகள், கலாசார விளையாட்டுத்துறை, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணத்தறை, கூட்டுறவு, வர்த்தக உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 -மாகாண சபை நிருவாகம் | 67,690,000 | 15,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 47 - போக்குவரத்து | - | 30,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 49 - மின்சக்தி மற்றும் எரிசக்தி | - | 40,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 53 - கூட்டுறவு அபிவிருத்தி | - | 9,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 60 - சமூக அபிவிருத்தி | - | 90,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 61 - வீட்டு மற்றும் சமூக வசதிகள் | 3,182,000 | 25,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 63 - தோட்ட அடிப்படை வசதிகள் | - | 10,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 80 - ஆரம்பக் கல்வி | - | 206,500,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 81 - இரண்டாந்தரக் கல்வி | - | 226,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 90- உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை | - | 35,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 93 - சமய மற்றும் கலாசார விவகாரங்கள் | 2,360,000 | 17,500,000 |
| தலைப்பு 811 - கல்வித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 191,427,000 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 80 - ஆரம்பக் கல்வி | 2,200,461,000 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 81 - இரண்டாந்தரக் கல்வி | 4,235,114,000 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 87 - கல்வியில் ஈடுபடுதலை மேம்படுத்தல் | 11,688,000 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 88 - கல்வித்திட்டமிடல், நிருவாக மற்றும் சேவைகளை வழங்குதல் | 12,662,000 | - |
| தலைப்பு 812 - உள்ளூராட்சித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 60-சமூக அபிவிருத்தி | 814,220,000 | - |
| தலைப்பு 813- கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 53- கூட்டுறவு அபிவிருத்தி | 37,289,000 | - |
| தலைப்பு 814-விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 90- உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை | 9,384,000 | - |
| தலைப்பு 820 - மாகாண தெருக்கள் அபிவிருத்தி கிராமிய அடிப்படை வசதிகள் மற்றும் உல்லாசப் பிராயணத்துறை அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3 - மாகாண சபை நிருவாகம் | 24,505,000 | |
| நிகழ்ச்சித்திட்டம் 50- நிர்மாணத்துறை மற்றும் பெருந்தெருக்களைப் பேணுதல் | 175,000,000 | 450,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 52-பிரதேச அபிவிருத்தி | - | 25,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 90- உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை | - | 32,000,000 |
| தலைப்பு 830 - சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3- மாகாண சபை நிருவாகம் | 21,978,000 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 51-கைத்தொழில் அபிவிருத்தி | - | 28,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 60- சமூக அபிவிருத்தி விவகாரங்கள் | 13,319,000 | 17,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 95-சமூகப் பாதுகாப்பு | | 47,000,000 |
| தலைப்பு 831- கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 51 - கைத்தொழில் அபிவிருத்தி | 88,516,000 | - |
| தலைப்பு 832-சமூக சேவைகள் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 95-சமூகப் பாதுகாப்பு | 88,311,000 | - |
| தலைப்பு 833-நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 95- சமூகப் பாதுகாப்பு | 33,871,000 | - |
| தலைப்பு 840 - சுகாதார, உள்நாட்டு வைத்திய மற்றும் மகளிர் விவகார அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3-மாகாண சபை நிருவாகம் | 27,678,000 | - |

| | மீண்டுவரும் செலவினங்கள் ரூபா | மூலதனச் செலவினங்கள் ரூபா |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டம் 71-வைத்தியசாலைச் சேவைகள் | - | 194,400,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 72-பொது சுகாதார சேவைகள் | - | 113,153,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 73-உள்நாட்டு வைத்திய சேவைகள் | - | 45,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 96-மகளிர் அபிவிருத்தி | - | 10,000,000 |
| தலைப்பு 841- சுகாதாரத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3-மாகாண சபை நிருவாகம் | 115,516,000 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 71-வைத்தியசாலைச் சேவைகள் | 2,028,568,000 | - |
| நிகழ்ச்சித்திட்டம் 72- பொது சுகாதார சேவைகள் | 529,148,000 | - |
| தலைப்பு 842- ஆயுர்வேதத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 73-உள்நாட்டு வைத்திய சேவைகள் | 146,531,000 | - |
| தலைப்பு 850- காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார, சுற்றாடல் விவகார மற்றும் மீன்பிடித்துறை அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3-மாகாண சபை நிருவாகம் | 26,731,000 | 2,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 40-காணி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி | - | 8,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 43-நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமை | - | 30,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 44-விவசாய அபிவிருத்தி | - | 50,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 45-கால்நடை வளங்கள் அபிவிருத்தி | - | 41,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 55- உணவுப் பாதுகாப்பைப் பேணுதல் | - | 3,000,000 |
| நிகழ்ச்சித்திட்டம் 57-சுற்றாடல் பாதுகாப்பு | - | 2,000,000 |
| தலைப்பு 851- காணி ஆணையாளர் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 40- காணி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி | 9,440,000 | - |
| தலைப்பு 852-விவசாயத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 44-விவசாய அபிவிருத்தி | 86,731,000 | - |
| தலைப்பு 853- விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 45 - கால்நடை வளங்கள் அபிவிருத்தி | 93,253,000 | - |
| தலைப்பு 861-மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித்திட்டம் 3-மாகாண சபை நிருவாகம் | 11,426,000 | - |
| மொத்தம் | 11,568,596,000 | 2,260,173,000 |

## இரண்டாம் அட்டவணை

முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii அமைச்சு/திணைக்களம் | iii விடய இல. | iv முற்பண வர்க்கம் | v செலவினங் களின் உச்ச எல்லை ரூபா | vi பெறுகை களின் ஆகக்கூடிய எல்லை ரூபா | vii பற்றுமீதி களின் உச்ச எல்லை ரூபா | viii பொறுப்புக் களின் உச்ச எல்லை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | | | | | | | |
| 1 | ஆளுநர் அவர்களின் அலுவலகம் | 8001 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 2,500,000 | 450,000 | 4,600,000 | |
| 2 | மாகாண சபைச் செயலகம் | 8011 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 2,200,000 | 500,000 | 6,900,000 | |
| 3 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 8021 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 2,000,000 | 600,000 | 4,000,000 | |
| 4 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு | 8031 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 900,000 | 250,000 | 2,000,000 | |
| 5 | பிரதான செயலாளர் | 8041 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 25,000,000 | 4,500,000 | 69,000,000 | |
| 6 | பொறியியற் சேவைகள் திணைக்களம் | 8081 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 25,000,000 | 6,000,000 | 35,000,000 | |
| 7 | வருமானத்திணைக்களம் | 8091 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 4,000,000 | 1,000,000 | 7,000,000 | |

| *i* | *ii* | *iii* | *iv* | *v* | *vi* | *vii* | *viii* |
|---|---|---|---|---|---|---|---|
| | *அமைச்சு/ திணைக்களம்* | *விடய இல.* | *முற்பண வர்க்கம்* | *செலவினங் களின் உச்ச எல்லை* | *பெறுகை களின் ஆகக்கூடிய எல்லை* | *பற்றுமீதி களின் உச்ச எல்லை* | *பொறுப்புக் களின் உச்ச எல்லை* |
| | | | | *ரூபா* | *ரூபா* | *ரூபா* | *ரூபா* |
| 8 | நீதி, சமாதானம், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி கல்வி, தகவற் தொழில்நுட்பம், செய்திகள், கலாசார, விளையாட்டுத்துறை, மின்சக்தி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக, உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி விவகார அமைச்சு | 8101 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 10,000,000 | 1,500,000 | 15,500,000 | |
| 9 | கல்வித் திணைக்களம் | 8111 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 350,000,000 | 125,000,000 | 430,000,000 | |
| 10 | உள்ளூராட்சித் திணைக்களம் | 8121 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 3,500,000 | 1,200,000 | 6,300,000 | |
| 11 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 8131 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 4,500,000 | 2,000,000 | 6,500,000 | |
| 12 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | 8141 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 1,500,000 | 500,000 | 3,200,000 | |
| 13 | மாகாண தெருக்கள் அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு | 8201 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 4,500,000 | 900,000 | 24,000,000 | |
| 14 | சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு | 8301 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 8,000,000 | 1,800,000 | 24,000,000 | |
| 15 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 8311 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 9,000,000 | 3,300,000 | 9,000,000 | |
| 16 | சமூக சேவைகள் திணைக்களம் | 8321 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 1,200,000 | 300,000 | 3,000,000 | |
| 17 | நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் | 8331 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 5,500,000 | 1,100,000 | 7,500,000 | |
| 18 | சுகாார, உள்நாட்டு வைத்திய மற்றும் மகளிர் விவகார அமைச்சு | 8401 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 3,000,000 | 1,200,000 | 12,500,000 | |
| 19 | சுகாதாரத் திணைக்களம் | 8411 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 110,000,000 | 50,000,000 | 120,000,000 | |
| 20 | ஆயுர்வேதத் திணைக்களம் | 8421 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 8,000,000 | 5,100,000 | 18,000,000 | |
| 21 | காணி, மாகாண தெருக்கள், விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார, சுற்றாடல் விவகார மற்றும் மீன்பிடித் தொழில் அமைச்சு | 8501 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 3,500,000 | 1,400,000 | 52,000,000 | |
| 22 | காணி ஆணையாளர் திணைக்களம் | 8511 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 1,200,000 | 600,000 | 3,800,000 | |
| 23 | விவசாயத் திணைக்களம் | 8521 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 15,000,000 | 3,500,000 | 45,000,000 | |
| 24 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 8531 | மாகாண அ. உ. முற்பணங்கள் | 7,000,000 | 2,500,000 | 12,500,000 | |
| | உப மொத்தம் | | | 607,000,000 | 215,200,000 | 921,300,000 | |

**ஏனைய முற்பணக் கணக்குகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 25 | சபைச் செயலகம் | 8012 | மாகாண உறுப்பினர்களுக்கான பலவின முற்பணங்கள் | 3,760,000 | 4,224,000 | 13,036,000 | |
| 26 | பொறியியற் சேவைகள் திணைக்களம் | 8011 | செய்த வேலைகளுக்கான முற்பணக் கணக்குகள் | 12,500,000 | 5,000,000 | 6,500,000 | 1,000,000 |
| 27 | நீதி, சமாதானம், நிதி திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவற் தொழில்நுட்பம், செய்திகள், கலாசார, விளையாட்டுத்துறை, மின்சகதி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி விவகார அமைச்சு | 8102 | அச்சக முற்பணக் கணக்குகள் | 2,500,000 | 1,000,000 | 2,800,000 | 500,000 |
| 28 | நீதி, சமாதானம், நிதி திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவற் தொழில்நுட்பம், செய்திகள், கலாசார, விளையாட்டுத்துறை, மின்சக்தி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி விவகார அமைச்சு | 8102 | கணனிக் கருத்திட்டம் | 800,000 | 300,000 | 200,000 | 50,000 |
| 29 | நீதி, சமாதானம், நிதி திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவற் தொழில்நுட்பம், செய்திகள், கலாசார, விளையாட்டுத்துறை, மின்சக்தி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் | 8102 | மெனேரிபிட்டிய அட்டுலுகம கல்வி அபிவிருத்தி மத்திய நிலையம் | 3,100,000 | 1,000,000 | 200,000 | 100,000 |

| i | ii<br>அமைச்சு/திணைக்களம் | iii<br>விடய இல. | iv<br>முற்பண வர்க்கம் | v<br>செலவினங் களின் உச்ச எல்லை<br>ரூபா | vi<br>பெறுகை களின் ஆகக்கூடிய எல்லை<br>ரூபா | vii<br>பற்றுமீதி களின் உச்ச எல்லை<br>ரூபா | viii<br>பொறுப்புக் களின் உச்ச எல்லை<br>ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| | தோட்ட நலன்புரி விவகார அமைச்சு | | | | | | |
| 30 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 8312 | நெசவுத் தொழிற்சாலைகளை ஸ்தாபித்தல் மற்றும் பேணுதல் | 10,000,000 | 8,000,000 | 2,000,000 | 800,000 |
| 31 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 8313 | சிறு கைத்தொழில் நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 10,000,000 | 5,000,000 | 5,000,000 | 500,000 |
| | | உப மொத்தம் | | 42,660,000 | 24,524,000 | 29,736,000 | 2,950,000 |
| | | கூட்டு மொத்தம் | | 649,660,000 | 239,724,000 | 951,036,000 | 2,950,000 |

01-319

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.